**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 156/2022 P.W. 8/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜார்ஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் காவல்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் 2020 ம் வருடம் குளச்சல் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 02.03.2020 ம் தேதி மாலை 04.00 மணியளவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி அங்குச் சென்று அங்கு சிகிட்சையில் இருந்த ஜேக்கப் ராஜ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் 19.30 மணிக்கு வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண்.71/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தையும் கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணைச் செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனுப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யவில்லை என்றாலும், பொய்யான தகவலின் அடிப்படையில் உண்மைக்கு மாறான முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.